**மாத்தளை பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 22 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாத்தளை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 167,447,102 தொகையான வருமானம் மற்றும் 03 செலவின விடயங்களின் பெறுமதி ரூபா 171,508,392 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் வருமானம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 4,061,290 தொகை அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 108,887,116 தொகையான 03 கணக்கு விடயங்களின் பெறுமதி ரூபா 102,755,052 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் வருமானம்

மற்றும் செலவினங்கள் ரூபா 6,132,064 தொகை குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) உடைத்தகற்றப்பட்ட ரூபா 88,490 பெறுமதியான கட்டிடங்களின் பெறுமதியை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் அக் கணக்கின் மீதி சமமான பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டதுடன், நூலகமொன்றையும் விளையாட்டரங்கையும் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 910,273 தொகையான செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 1,419,734 கூட்டுத்தொகையான அலுவலக உபகரணங்கள், தளபாட மற்றும் பொறுத்திகள் என்பன மூலதனமாக்கப்படாதிருந்ததுடன் இயந்திரம் மற்றும் 02 தளபாட விடயங்களின் பெறுமதி ரூபா 222,200 தொகையான குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) ஆயுர்வேத மருத்தகத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த 03 நிலையான சொத்து விடயங்களின் பெறுமதி மற்றும் ஜே.சீ.பீ இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியமையால் கிடைக்க வேண்டிய ரூபா 262,500 தொகையான வருமானம் என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாகாண சபை மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து நன்கொடையாகக் கிடைத்த ரூபா 6,390,000 பெறுமதியான டபல்கெப் வண்டியின் பெறுமதி மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 158,464 செலவினத்திற்காக கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 13,690,739 தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 710,866 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 08 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 56,439,202 ஆக இருந்ததுடன் 03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 2,260,625 கூட்டுத்தொகையான 05 மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 10 கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 51,864,326 ஆக இருந்ததுடன் 03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 3,470,363 கூட்டுத்தொகையான 04 மீதிகளும் அதில் உள்ளடங்கி உள்ளது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 40,593,272 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132 ஆம் பிரிவு | தொடர்புடைய பிரிவிற்கு இனங்காமல் பொதுக் கூட்டம் மற்றும் விஷேட பொதுக்கூட்டங்களுக்குச் சமூகமளித்தமைக்காக தலைவர் உபதலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு ரூபா 169,000 தொகை வருகைப் படியாக செலுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீஎப் 437 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ரூபா 219,533 தொகை செலுத்தி சபைக்குச் சொந்தமான 12 வாகனங்களின் காப்புறுதி மேவுகை தனியார் காப்புறுதிக் கம்பனியிலிருந்து பெறப்பட்டிருந்தது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவு**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,288,566 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,241,697 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 2,046,869 அதிகரிப்பைக் காண்பித்தது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வுகள்**

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 02 ஆண்டுகளில் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான முக்கியமான சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) நிதி விளைவின் மிகையை செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாக எடுப்போமாயின் அந்த சதவீதத்தில் தொடர்ச்சியான வீழ்ச்சி ஒன்றைக் காண்பித்திருந்தது.

(ஆ) மொத்த செலவினத்தை மொத்த வருமானத்தின் சதவீதமாக எடுப்போமாயின் இந்த சதவீத்தில் தொடர்ச்சியான உயர்வைக் காட்டியதுடன் அது நிதிக் கட்டுப்பாடு தொடர்பில் திருப்பதிகரமான நிலையில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) முன்னைய சில ஆண்டுகளில் தொழிற்படு மூலதனத்தில் தொடர்ச்சியாக குறைவொன்றைக் காட்டியது.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 வருமான சேகரித்தலில் செயலாற்றல்**

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை நீர்க்கட்டண மீதி ரூபா 4,497,627 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் அறவிட முடியாதிருந்த ரூபா 546,918 மீதியும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 1,516,233 மீதியும் உள்ளடங்கி இருந்தது.

**2.3.2 ஆதனவரி**

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 774,089 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 62,594 மீதியும் உள்ளடங்கி இருந்தது.

**2.3.3 ஏக்கர் வரி**

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த ஏக்கர் வரி மீதி ரூபா 221,428 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 03 வருடகாலத்தை விஞ்சி ரூபா 206,731 மீதியும் உள்ளடங்கி இருந்தது.

**2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 1,126,203 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 9,310,027 தொகையும் அறவிடவேண்டியிருந்தன.

### 2.3.5 மிகைக் கட்டணம்

-------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்குரிய ரூபா 1,737,060 தொகை அறவிடவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

-------------------------------------------------------------

1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டிடத் திட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்காக மீளாய்வாண்டிலும் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் கிடைக்கப் பெற்ற 935 கட்டிட விண்ணப்பங்களில் 686 விண்ணப்பங்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இணக்கச் சான்றிதழ் அதில் 43 விண்ணப்பங்களுக்காக மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன.

### 3.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 30,000 கிரயமான மோட்டார் கைச்சிளொன்று 02 வருட காலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களில் பொருத்துவதற்காக ரூபா 343,128 செலவில் தயாரிக்கப்பட்டிருந்த 58 பெயர்ப்பதாதைகள் உரிய செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டம்

சபையின் ஊழியர்களுக்காக 2003 ஆம் அண்டு முதல் 2010 வரையான காலப்பகுதியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் ஊழியர் சேமலாக நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் அனுப்பாமையினால் ரூபா 104,430 தொகை மிகைக்கட்டணமாக சபை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

### 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) திறந்த கூறுவிலை கோரல் அல்லது பதிவுத்தபால் மூலம் கூறுவிலை பெறப்படாமலும் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடாமலும் அலுவலகக் கடமைகளுக்காக கெப் வண்டியொன்றை வாடகைக்குப் பெற்று ரூபா 297,400 வாகன வாடகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையினால் கெப் வண்டியொன்று கொள்வனவு செய்யும் போது வாகன மாதிரி வழிகாட்டி (Cateloy) சமர்ப்பிக்கப்பட்டாமையால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 7,390,000 ஆகக் குறைந்த விலை ஏற்றுக்கொள்ளப்படாமல் ரூபா 7,750,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டமையால் சபைக்கு ரூபா 360,000 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்ய வேண்டியேற்பட்டிருந்தது.

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | நிதியேற்பாடு | வேலையின் பெயர் | செலவிடப்பட்ட தொகை | பௌதீகப் பரிசோதனைத் திகதி | குறைபாடுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | மாகாண நெகும அபிவிருத்தி மானியம் | அலுவிகாரை பல்நோக்கு கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்தல் | 962,928 | 2015.05.19 | (i) கட்டிடத்தை நிர்மாணித்து பால் சேகரிக்கும் நிலையமாக பயன்படுத்தும் நோக்கமாக இருந்த போதிலும் கட்டிடம் மூடப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | (ii) கட்டிடத்தின் சட்டரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கமநெகும ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை அபிவிருத்தி மானியம் | பிரிதேவால முதலாவது ஒழுங்கை கொங்கிரீட் இடல் | 489,241 | 2015.05.19 | வீதி 02 வீடுகளுக்கு செல்வதற்காக மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் வீதியில் வாகனப் போக்குவரத்து நடை பெறவில்லை. |
| (இ) | மாகாண நெகும அபிவிருத்தி மானியம் | மெதகம்வத்த வீதியில் பக்கச் சுவர் கட்டுதல் | 1,176,000 | 2015.05.19 | வயலுடன் கூடிய பகுதியில் வீதியோரங்களில் பக்கச் சுவர் அமைக்கப்பட்டிருந்த போதிலும் வீதிப் பகுதியை மண்நிரப்பி பாவனைக்கு எடுப்பதற்கு இயலுமான வகையில் அமைக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் 04 தொழிலாளர்களைப் பயன்படுத்தியதன் பின்னர் 400 கிலோகிராம் அளவில் நாளாந்தம் கூட்டுப்பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமையும் சேகரிக்கப்பட்ட கழிவுகளில் 40 சதவீதமான அளவில் பொலித்தீன் அகற்றுவதற்கு முறையான திட்டமொன்று பின்பற்றப்படாது மண்ணால் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையையும் காணக்கூடியதாக இருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

எழுத்துமூலமாக கடமைகள் கையளிக்கப்படாத ஒரு உத்தியோகத்தர் உள்ளகக் கணக்காய்விற்காக நியமிக்கப்பட்டிருந்த போதிலும், ஏனைய கடமைகளும் அவருக்குக் கையளிக்கப்பட்டமையின் காரணமாக எதிர்பார்த்த அளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

(அ) 09 வருமான விடயங்களின் ரூபா 6,752,000 தொகையான மதிப்பிடப்பட்ட வருமானங்களில் எந்த வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன் மேலும் 20 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 02 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(ஆ) 24 செலவின விடயங்களுக்கான ரூபா 1,148,000 தொகையான மொத்த நிதி ஏற்படும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 25 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 01 சதவீதம் முதல் 69 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டில் பாதீடு திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.4 தீர்க்கப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 05 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 21,444,788 ஆகும்.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) ஒப்பந்த நிருவாகம்

(ஊ) மனித வள முகாமைத்துவம்